**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

28-08-2017

## சுற்றறிக்கை எண் 15

அன்புடையீர்,

வணக்கம். இளநிலை உதவியாளர் (கணக்கு மற்றும் நிர்வாகப் பிரிவு) உள்முகத் தேர்வுக்கு கல்வித்தகுதி எஸ்.எஸ்.எல்.சிக்கு பதிலாக பட்டப்படிப்பு என மாற்றியதை எதிர்த்தும், உள்முகத் தேர்வினை முடிக்காமல் வாரியம் நேர்முகத் தேர்வுக்கு செல்வதை எதிர்த்தும், நமது சங்கம் உயர்நீதி மன்றத்தில் வழக்கினைத் தொடுத்து இடைக்கால தடையுத்திரவு பெற்றுள்ளதை தாங்களறிவீர்கள்.

இதனைத் தொடர்ந்து வாரிய நிர்வாகம் இளநிலை உதவியாளர் உள்முக நியமனத்திற்கு இன்றைய தேதியில் பணியாற்றும் தகுதி பெற்ற பட்டதாரிகளின் விபரத்தையும், கல்வித் தகுதி மாற்றம் செய்யப்பட்ட தேதியான 24.5.2014ல் பட்டம் பெறாத பணியாளர்களின் விபரத்தையும், உடனடியாக அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அவர்களின் 16.08.2017 கடிதத்தில் கேட்டுள்ளது.

2) 20.08.2017 ஞாயிறன்று நமது சங்கத்தின் உயர்மட்டக்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. சங்க கட்டமைப்பினை வலிமைப் படுத்துதல், டிசம்பர் மாதம் கடலூரில் பொதுக்குழு நடத்துவது, செங்கல்பட்டிலுள்ள நமது சங்கத்திற்கு சொந்தமான குடியிருப்பு கட்டிட பழுதுகளை சரி செய்வது மற்றும் புனரமைப்பது, SNLI பதவி உயர்வில் உள்ள குறைபாடுகள், JE II தர ஊதிய வேறுபாடுகள், பகுதி நேர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்சனைகள் முதலியவற்றில் தொழிற் தகராறு எழுப்புவது, ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு திருத்தம் - நமது சங்கத்தின் அணுகுமுறை முதலிய பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதம் மேற்கொள்ளப்பட்டது.

3) பெரிய கார்ப்பரேட் முதலாளிகளின் கெடுபிடி வளையத்தை உடைத்துக்கொண்டு, தகவல் தொழில் நுட்பப் பிரிவில் (I.T.), இந்திய நாட்டின் முதற் தொழிற் சங்கம் (KITU) கர்நாடகாவில் 20.8.2017 அன்று பிறந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பிரிவில் பணிபுரிவோர் கொழுத்த சம்பளம் பெற்றுக்கொண்டு அளவுக்கு மீறிய செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நாம் எண்ணுவது அவர்களின் ஒரு பக்கம் மட்டுமே.

இந்த இளைஞர்கள் எவ்விதப்பணிப் பாதுகாப்புமின்றி, வேலைநேரக் கட்டுபாடின்றி, பெருத்த மன அழுத்தத்துடன் பணியாற்றி வருகிறார்கள் என்பது அவர்களது மறுபக்கம்.

20, 30 ஆண்டுகளுக்குப் பிறகாவது அந்த இளைஞர்களை தொழிற்சங்க அமைப்புக்குள் கொண்டுவந்து அவர்களது எதிர்காலத்தை முறைப்படுத்தி, பாதுகாப்பது நமது சமுதாயக்கடைமையாகும்.

4) புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு பதிலாக பழைய நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் திட்டத்தை மீண்டும் அமுல்படுத்திடக் கோரி 22.8.2017 அன்று இலட்சக்கணக்கான தமிழகஅரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்தவர்களின் எண்ணிக்கை சுமார் 50 சதவீதம் எனக் கூறப்படுகிறது. அரசின் கெடுபிடி, அச்சுறுத்தல்கள் பற்றி சிறிதும் கவலைப்படாமல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தங்களது தொழிற்சங்க உணர்வை வெளிப்படுத்திய அரசு ஊழியர்களுக்கு நமது சங்கத்தின் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால், தற்போது தமிழகத்தில் நடைபெற்று வரும் உட்கட்சி அரசியலுக்கு,

ஊடகங்கள் கொடுக்கும் அளவுக்கதிகமான விளம்பரத்தினால், அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைக்காக நடத்தப்பட்ட ஒரு வலிமைமிக்க போராட்டம் முக்கியத்துவம் பெறாதது வருந்தத்தக்கதாகும். பழைய ஓய்வூதியம், 7வது ஊதியக்குழு பரிந்துரை அமல் முதலிய கோரிக்கைகள் மேலும் தாமதமானால், செப்டம்பர் திங்கள் 7ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக போராட்டக் குழு அறிவித்துள்ளது.

நமது மின்வாரியத்திலும் 1.4.2003-க்குப்பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும், 1.12.2015 முதல் 2.57 மடங்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம், 14.3% ஊதியம் மற்றும் ஓய்வூதிய உயர்வு கோரிக்கைகளும் அரசு ஊழியர்களின் போராட்ட வெற்றியில் அடங்கியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்திட வேண்டும்.

5) 24.08.2017அன்று வாரியக்கூட்டம் நடைபெற்றது.கணக்கீட்டாளர்IIம் நிலை நியமனத்திற்கு கல்வித் தகுதி பட்டப்படிப்பு என்பதனை வாரியக் கூட்டத்தில் ஏற்க மறுத்தும், திருப்பூர் வட்டத்திலிருந்து பிரிக்கப்படும் பல்லடத்தினை தலைமையிடமாகக் கொண்டு புதிய மின் விநியோக வட்டம் உருவாக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

6) 26.08.2017 அன்று மின்வாரியத் தலைவரின் நேர்காணலில்:-

1) உதவிக் கணக்கு அலுவலர் நேரடி நியமனம் ஒரே நேரத்தில் பெரிய அளவில் 20,30 என்று தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக 9,10 ஆண்டுகள் பணிமுடித்த கணக்கு மேலாளர்கள் பாதிக்காத முறையில் சிறிய அளவில் ஆண்டொன்றுக்கு 2 அல்லது 3 பேர் மட்டுமே நேரடி நியமனம் செய்யப்பட வேண்டும் என்று வேண்டியும்,

2) K2 ஒப்பந்தம் மற்றும் EPF சட்ட அமுல் முதலியவற்றால் மட்டுமே வாரியத்தில் கடைபிடிக்கும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நியாயப்படுத்திட முடியாது என்பதை சுட்டிக் காட்டியும், ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாகவும், நிரந்தரத் தொழிலாளர்கள் செய்யக்கூடியதுமான வேலைகளை செய்யும் தொழிலாளர்கள் வருங்காலத்தில் நிரந்தரம் கோருவதைத் தவிர்க்க முடியாது என்று தெரிவித்தும்,

3) 90,000 ஓய்வூதியர் நலன்களுக்கான பணிகளை மேற்கொள்ளும் வாரியத் தணிக்கைப் பிரிவிற்கு நிரந்தர தலைமை அலுவலரை நியமிக்க வேண்டியும் முறையீடு செய்துள்ளோம். (கடிதங்கள் இணைக்கப்பட்டுள்ளன)

எதிர்வரும் 31.8.2017 அன்று திருத்தணியில் நடைபெறும் நமது சங்கத்தின் உதவிப்பொதுச்செயலாளர் திரு.T.தயாளன் அவர்களின் மகள் திருமணம் சீரோடும், சிறப்போடும் நடைபெற சங்கத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்

பெறுநர்
கிளைச் செயலாளர்கள்
வட்டச் செயலாளர்கள்
மண்டலச் செயலாளர்கள மற்றும் மத்திய சங்க பொறுப்பாளர்கள்

தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

**K.**சந்திரசேகரன்
தலைவர்

**R.**சந்திரசேகரன்.
பொதுச்செயலாளர்

To. 26-08-2017

The Chairman Cum Managing Director,
TANGEDCO,
Chennai – 2

Respected Sir,

Sub: Estt – promotion from Accounts Supervisor class III service to the post of Assistant Accounts Officer classII service Reg.

Ref: 1. CE/P Lr.No.099538/669/G.30/G301/2016-2, dt.2.6.2017
2. Notification No.01/2017, dt.13.6.2017.

********

In the reference cited No.1 suitability reports in respect of 88 Accounts Supervisors have been called for preparation of panel for promotion to the post of Assistant Accounts Officers.

Simultaneously, in the reference cited No.2, a notification was issued under 01/2017, dt.13.6.217 for direct recruitment of 18 Assistant Accounts Officers possessing C.M.A. qualification, selection processes were completed and the incumbents also joined during the month end of July 2017.

We also understand that there is a proposal in the Board for recruiting 10 more C.M.A. graduates for appointment to the post of Assistant Accounts Officers.

The existing employees who have put in about 25 years of service in TANGEDCO, particularly 9 years of service in the post of Accounts Supervisors and shortly expecting Assistant Accounts Officer promotions, are very much disappointed, since all the available vacancies are being filled up with direct recruitment.

Hence, we request the CMD may be pleased to defer the proposal for further recruitment of 10 more Assistant Accounts Officers through Direct recruitment and fill the arising vacancies by way of promotion from the existing senior employees holding the post of Accounts Supervisors.

We would also like to suggest the CMD to please consider in future, the direct recruitment of only 2 or 3 AAO's every year instead of bulk recruitment as has been done recently to avoid stagnation of promotion of the existing senior employees serving in the Board for a long number of years.

Thanking you,

Yours faithfully

General Secretary

Copy to
The Chief Engineer / Personnel / Tangedco,
The President / Namakkal.

**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

பெறுநர். 26-08-2017

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம்,
சென்னை – 2

மரியாதைக்குரிய ஐயா,

பொருள் : மின்வாரியம் - தணிக்கைப்பிரிவு – தலைமை அலுவலர் பொறுப்பினை நிரப்பிடக் கோருதல்.

மின்வாரியம் 1) செயலகப் பிரிவு, 2) நிர்வாகப்பிரிவு 3) தொழில் நுட்பப் பிரிவு, 4) கணக்குப்பிரிவு மற்றும் 5) தணிக்கைப்பிரிவு என 5 பிரிவுகளாக செயல் பட்டு வருகிறது.

பல ஆயிரம் கோடி ரூபாய் மூலதனத்துடன், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணியாற்றும் இந்நிறுவனத்தில், தணிக்கை பிரிவின் பங்கு மிக முக்கியமானது. இதர பிரிவுகள் சீராகவும், செம்மையாகவும், எவ்வித வருவாய் இழப்பு ஏற்படாமலும், கூடுதல் வருவாய் ஈட்டித்தருகின்ற வகையிலும் செயல்படுவது நமது மின்வாரியத்தின் தணிக்கைப் பிரிவு என்றால் மிகையாகாது.

மேற்கண்ட பணிகளுடன் 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் எவ்வித தங்கு தடையின்றி பிரதி மாதம் முதல் தேதி நேரிடையாக அவரவர் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் பெறுவதற்கு நம்முடைய தணிக்கைப்பிரிவு பெரும்பங்காற்றுகிறது. தமிழக அரசு தலைமைச் செயலக மற்றும் அமைச்சுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் முதலியோர் ஓய்வூதியம் வெறுவதற்கு பல மாதங்கள் காத்திருக்க வேண்டும். ஆனால் நமது மின்வாரியத்தில் மட்டும் தணிக்கைப் பிரிவிற்கு முன் மொழிவு கிடைத்த அடுத்த மாதத்திலேயே ஓய்வூதியம் கிடைக்கிறது என்பதை ஓய்வூதியர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தணிக்கைப்பிரிவுக்கு 1.7.2017 முதல் நிரந்தர தலைமை அலுவலரை நியமனம் செய்யாமல் கூடுதல் பொறுப்பாக அடுத்த கீழ்நிலை அலுவலருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

உள்முகத் தலைமை அலுவலர் பொறுப்புக்கு முதன்மையின் அடிப்படையில் தற்போது சீனியர் உதவி உள்முகத் தணிக்கை அலுவலராகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் திரு.P.கருப்பையா தகுதி பெற்றுள்ளதாகவும், ஆனால், தான் உஸ்மானியா பல்கலை கழகத்தில் பயின்று பட்டம் பெற்றது பிரச்சனையாக்கப்படுவதாகவும் அதனால் தனது பதவி உயர்வு தள்ளிப் போவதாகவும் மனு கொடுத்துள்ளார். ( நகல் இணைக்கப் பட்டுள்ளது).

இது தொடர்பாக மரியாதைக்குரிய தாங்கள் உஸ்மானியா பல்கலை கழகத்திற்கு எழுதிய கடிதம் நாள் 05.11.2016, அதற்கு பல்கலைகழகம் தங்களுக்கு அனுப்பிய பதில் கடிதம் நாள்.06.12.2016, வாரியச்செயலாளருக்கு பட்டப்படிப்புச் சான்றின் உண்மைத் தன்மையை உறுதி செய்து அனுப்பிய 3.12.2016 கடிதப் போக்குவரத்துகள் அனைத்தும் அவர் B.Com., பட்டம் பெற்றதை உறுதி செய்கிறது.

மேலும் U.G.C. சட்டம் 1956-ம் ஆண்டின் கீழ் அமைக்கப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழுமம், தனது 12.7.2017-ல் நம்முடைய வாரியச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளது.

" Subject : Clarification on validity of B.Com., (one sitting) degree in Osmania University

With reference to your letter no.55780/A1/A12/2016-8 dated 02.05.2017 on the above subject, I am to enclose the copies on UGC letter No.11-4/1992(CPP-II)
dated 4th March, 1997 and 30.06.1999 which are self-explanatory."

மேற்கண்ட கடிதங்களில் கூறப்பட்டிருக்கும், இப்பிரச்சனைக்கு சம்மந்தப்பட்ட பகுதிகளை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

1. UGC letter No.11-4/1992(CPP-II) dated 4th March, 1997

" The Degrees of the candidates enrolled for the one-time Bachelor's Degree programme, upto the year 1995-96 may be treated as valid. The degree of the candidates declared valid may be treated at Par with other degrees of the same University for all purposes including admission to higher degrees and employment."

The above decision is applicable to all the universities who are running one sitting degree courses.

2. UGC Letter dated 30.06.1999

" The Candidates who have completed their B.A., under one sitting dueing the year 1998-99 may be treated as Valid. The degree of the candidates declared Valid may be treated at Par with other degrees of the Universities for all purposes."

வாரிய நிர்வாகம் எழுப்பிய கேள்விகளுக்கு பல்கலைகழக மானியக் குழுமம் விளக்கம் அளித்தப் பிறகும், அவரது பதவி உயர்வில் முடிவு எதுவும் எடுக்கப்படாமல் தாமதபடுத்தப்பட்டு வருகிறது.

எனவே மேற்கூறியவைகளின் அடிப்படையில் 90 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஓய்வூதியர்களின் நலன்களை பாதுகாக்கும் உள்முக தணிக்கைப் பிரிவிற்கு நிரந்தர தலைமை அலுவலராக அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ள திரு. P.கருப்பையா அவர்களின் விண்ணப்பத்தினை பரிசீலித்து விரைவில் நியாயம் வழங்கிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல்: வாரிய செயலாளர்/செயலாளர்
,, தலைவர் / நாமக்கல்.

தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

**K.**சந்திரசேகரன்
தலைவர்

**R.**சந்திரசேகரன்.
பொதுச்செயலாளர்

To

23-08-2017

The Chairman Cum Managing Director,
TANGEDCO,
Chennai – 2

Respected Sir,

Sub: TANGEDCO&TANTRANSCO – Compliance of EPF & MP Act 1952 – to instruct the contractors to register in the o/o Assistant provident Fund Commissioner, and obtain EPF main code number – Regarding.

Ref: CE/P Memo.No.094813/G.44/G.441/2007, Dated 01.08.2017

**********

With reference to the above we would like to bring the following to your kind notice and necessary further action.

1. The TNEB was formed during the year 1957 (actual date 1.7.1957) under the Indian Electricity Supply Act 1948. During the past 40 years, thousands of employees who were engaged as contract labourers in TNEB had been absorbed as regular employees due to continuous struggle by the Trade Unions to save the employees from exploitation viz. working long hours, cheaper wages under hazardous conditions without any social security like ESI, EPF , Minimum wages, etc.,. The main intention of the Trade Unions is to bring them under Social Security Net and ensure social justice.

2. We would like to appreciate and register our thanks to the TNEB and the successive Tamil Nadu Governments for their gestures in making these many thousands of Contract Labourers as regular employees. Except in TNEB nowhere in this country this has happened . The real scenario in all other sectors is to contractualise the Regular works by way of out sourcing, man-power agency, engaging contractors and completing the work through them.

3. When the Board says it has no contract labourers with them, then what is the necessity for issuing instructions to all CEs' and SE's to ensure compliance of EPF and MP Act 1952 by the contractors.

4. From the above orders it is explicit that the Board is giving the regular and perenniel nature of works also, to the contractors and get the work done by the labourers engaged by the so called contractors. If the Board thinks, by this method it can avoid the workmen, seeking absorption later on, it will only be illusory.

5. However if the Board wants to adopt a contract system in TANGEDCO mere compliance of EPF and MP Act 1952 alone by the TANGEDCO and its contractor is not sufficient.

6. Compliance of sec.7 i.e. "Registration of establishments", for employing contract labours and Sec.12 "Licensing of Contractors" for doing the job by engaging their men in the

particular establishment are mandatory as per the contract labour (Regulation & Abolition) Act 1970.

7. Unless the above sections are complied with, as per CE(Gl) Memo dated 11.11.1976 and CH Lr.dated 31.12.1985 , any process carried out by the Board officials following the instructions issued under Circular memo dated 29/30.11.2013 cited as reference No.1 under the memo dated 1.8.2017 will not be considered a genuine system.

Thanks for your Co-operation

Yours faithfully

General Secretary

Copy to
The Chief Engineer / Personnel / Tangedco,

The President / Namakkal.